# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

### சட்டமாணிப் பரீட்சை – ஆண்டு I - 2018

### சட்ட வழிமுறை

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. பெரும்பாலானவர்களால் சட்டமானது 'சமூகத்தின் மிகச் சிறந்த நாகரிகமயப்படுத்துனர்' ஆகக் கருதப்பட்டாலும், 'சட்டமென்பது என்ன?' என்ற வினாவானது தனித்த ஒரு வரைவிலக்கணத்திற்கு உட்படாததாக உள்ளது. ஆதலால், காலத்திற்குக் காலம், சட்டத்தைப் புரிந்து கொள்ளுதலை வேறுபட்ட சிந்தனைப் பிரிவுகள் ஆக்கிரமித்துள்ளன. அவை எவ்வாறு 'சட்டத்தை' வரைவிலக்கணப்படுத்துகின்றன என்பது தவிர்க்க முடியாதவாறாக வழக்கறிஞர்களதும் நீதிபதிகளதும் சிந்தனைகளைப் பாதித்துள்ளன.

   மேலுள்ள கூற்றை ஏதேனும் இரண்டு சட்ட சிந்தனைப் பிரிவுகளின் பின்னணியில் ஆராய்வதுடன் உமது விடைகளை உதாரணங்களால் ஆதாரப்படுத்துக.

2. எதிரிடை (adversarial) முறைமையானது வழக்கிடுநர் தரப்பு மற்றும் எதிர்வாதி என்ற, இரண்டு திறத்தவர்களிடையேயான பகிரங் மோதல் ஒன்றினூடாக உண்மையை உறுதிப்படுத்த வடிவமைக்கப்பட்டதாகும். எதிரிடை முறைமைக்கு நேர் முரண்பட்டதாக, உசாவு (inquisitorial) முறைமையானது எல்லா சான்றுகளினதும் பரந்துபட்ட விசாரணை மற்றும் ஆய்வு மூலம் நிகழ்வுகளை எண்பிப்பதில் நீதிமன்றத்தினுடைய தீவிர பங்களிப்பைத் தேவைப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், இவ்விரு முறைமைகளும் பிணக்குகளுக்குத் தீர்வு காண்பதிலும் தனிப்பட்டவர்களுக்கும் சமூகத்திற்குமான நீதியை அடைவதிலும் உள்ளார்ந்த குறைபாடுகளைக் கொண்டுள்ளன.

   இவ்விரு முறைமைகளதும் முக்கிய பண்புகளுடன் தொடர்புறுத்தி மேலுள்ள கூற்றின் வலிதாந்தன்மை பற்றி கருத்துரை செய்க.

3. (அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டிற்கும் விடையளிக்க.

(அ) ரியூற்றிபோர் என்பது இந்து சமுத்திரத்திலுள்ள தீவாக அமைந்துள்ள நாடு ஒன்றாகும். மாணவர்கள் அவர்களுடைய பாடசாலை நேரங்களின் பின்னர் தனியார் வகுப்புகளுக்குச் செல்வதுடன், அந்த தனியார் வகுப்பு கலாசாரமானது அவர்களுடைய ஓய்வையும் ஆரோக்கியத்தையும் பாதிக்கின்றது. தனியார் வகுப்பு நிலையங்கள் பின்னிரவு வரை வகுப்புகளை நடாத்துவதால், ரியூற்றிபோர் அரசாங்கமானது நாட்டில் தனியார் வகுப்பு நேரங்களைக் கட்டுப்படுத்துவதற்காக சட்டமொன்றை ஆக்கியுள்ளது. அச் சட்டமானது "எல்லா தனியார் கல்வி நிலையங்களும் பி.ப 6.00 மணிக்கு மூடப்படுதல் வேண்டும்" என்கின்றது. அல்பா தனியார் நிலையத்தின் சொந்தக்காரரான லால் என்பவர் அவரது தனியார் கல்வி நிலையத்தை பி.ப 6.00 மணிக்கு மூடிவிட்டு பி.ப 6.15 மணிக்கு அதனை மீள ஆரம்பித்து பின்னிரவு வரை தனியார் வகுப்புகளை நடாத்தினார். அச் சட்டத்தை மீறியமைக்காக அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. அச் சட்டத்தின் ஏற்பாட்டிற்கமைய பி.ப 6.00 மணிக்கு அந்தத் தனியார் கல்வி நிலையத்தை தான் மூடியதால் தான் குற்றத் தவறு எதனையும் புரிந்திருக்கவில்லை என லால் வாதிடுகின்றார்.

வழக்குத்தொடுநர் தரப்பிற்காக நீர் வாதிடுவதாகக் கருதுக. பொருள்கோடலின் பொருத்தமான விதிகளைப் பிரயோகித்து அவ் வழக்கை நீர் எவ்வாறு வாதிடுவீரென விளக்குக.

(ஆ) றக்பூர் என்பது இந்து சமுத்திரத்திலுள்ள தீவாக அமைந்துள்ள நாடு ஒன்றாகும். கல்வி நிலையங்களில் பகிடிவதையைத் தடுப்பதற்காக றக்பூர் அரசாங்கமானது சட்டமொன்றை ஆக்கியுள்ளது. அச் சட்டமானது பகிடிவதை என்பது "கல்வி நிறுவனமொன்றின் மாணவரொருவருக்கு உடல் அல்லது உளவியல் ஊறை அல்லது மன வலியை அல்லது அச்சத்தை ஏற்படுத்துகின்ற அல்லது ஏற்படுத்தக் கூடிய கல்வி நிறுவனமொன்றின் உள்ளே அல்லது வெளியேயான ஏதேனும் செயல்" என ஏற்பாடு செய்கின்றது. ஏபிசி பல்கலைக்கழகத்தில் பகிடி வதை காலத்தின் போது முதலாம் வருட மாணவர்களின் தலையை சிரேஷ்ட மாணவர்கள் வழிப்பதாக ஊடகத்தில் பிரசுரிக்கப்படுகின்றது. தகவலொன்றையடுத்து பொலிசார் அப் பல்கலைக் கழகத்திற்கு அண்மையிலுள்ள முடிவெட்டு நிலையமொன்றை சுற்றிவளைத்ததுடன், அந்த முடிவெட்டு நிலையத்தில் ஏழு முதலாம் வருட மாணவர்களும் மூன்று சிரேஷ்ட மாணவர்களும் அமர்ந்திருப்பதைக் கண்டனர். அந்த முதலாம் வருட மாணவர்கள் தமது பைகளை அவர்களுடைய விரிவுரை மண்டபத்தில் வைத்துவிட்டு, அவர்களுடைய விரிவுரை நேரத்தின் போது அந்த முடி வெட்டு நிலையத்திற்கு வந்துள்ளனர். அந்த முதலாம் வருட மாணவர்களின் தலையை வழிக்குமாறு தனக்கு அந்த சிரேஷ்ட மாணவர்கள் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக அந்த முடி வெட்டு நிலையத்தின் சொந்தக்காரர் தெரிவித்தார். அச் சட்டத்தின் கீழ் பகிடி வதையைப் புரிந்ததற்காக அந்த மூன்று சிரேஷ்ட மாணவர்களும் குற்ற வழக்கிடப்பட்டனர். பொலிசார் அந்த முடிவெட்டு நிலையத்திற்கு வந்த போது அந்த முதலாம் வருட மாணவர்களின் தலைகள் வழிக்கப்பட்டிருக்கவில்லை, என்பதால், அச் சட்டத்தின் கீழ் தாம் ஏதேனும்

குற்றத் தவறைப் புரிந்திருக்கவில்லை என அந்த சிரேஷ்ட மாணவர்கள் வாதிடுகின்றனர்.

வழக்குத்தொடுநர் தரப்பிற்காக நீர் வாதிடுவதாகக் கருதுக. பொருள்கோடலின் பொருத்தமான விதிகளைப் பிரயோகித்து அந்த வழக்கில் நீர் எவ்வாறு வாதிடுவீரென விளக்குக.

4. அ, ஆ மற்றும் இ ஆகிய நிகழ்வுகளின் மீதமைந்த வழக்கொன்று இலங்கை உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்களைக் கொண்ட அமர்வொன்றின் முன்னால் வாதிடப்படுகின்றது. உமது விடையை ஆதாரப்படுத்துவதற்குப் பொருத்தமான அதிகாரங்களை ஆதாரங் காட்டி, பின்வரும் தீர்ப்புகளின் பிரயோகத்தை ஆராய்க:

(அ) அ, ஆ மற்றும் இ ஆகிய நிகழ்வுகளின் மீதமைந்த வழக்கொன்றில் 1987 இல் இலங்கை உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட நிறைகுழாம் (Full Bench) தீர்ப்பொன்று;

(ஆ) அ, ஆ, இ மற்றும் ஈ ஆகிய நிகழ்வுகளின் மீதமைந்த வழக்கொன்றில் இலங்கையிலிருந்து செய்யப்பட்ட மேன்முறையீட்டில் கோமறைக் கழகத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று;

(இ) அ, ஆ மற்றும் இ ஆகிய நிகழ்வுகளின் மீதமைந்த வழக்கொன்றில் நியூசிலாந்தின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் 2004 டிசெம்பரில் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று; மற்றும்

(ஈ) அ, ஆ மற்றும் இ ஆகிய நிகழ்வுகளின் மீதமைந்த வழக்கொன்றில் இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட அமர்வொன்றினால் 2017 இல் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று.

5. "*ஷிலு*" என்பது சீலாந்து அரசிலுள்ள மீன்பிடி மற்றும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள சுதேசிய சமூகமொன்றாகும். அந்த *ஷிலு* சமூகமானது சமுதாயத்திலுள்ள இளம் பெண்களிடையே பெண் உறுப்பு சிதைவினைத் தேவைப்படுத்தும் பாரம்பரிய வழக்கமொன்றைக் கொண்டுள்ளது. இந்தப் பாரம்பரிய வழக்கமானது *ஷிலு* சமூகத்தின் அங்கத்தவர்களால் இறுக்கமாகப் பின்பற்றப்படுகின்றது. 2018 யூனில், நாட்டிலுள்ள பெண்கள் உரிமைகள் தாபனம் ஒன்றான பெண்கள் @ தலைமை என்பது பெண் உறுப்பு சிதைவுக்காக கண்ணீருடனும் அச்சத்துடனும் இளம் பெண்கள் வரிசையில் நிற்கின்ற படங்களைக் காட்டுகின்ற ஒளிப்பதிவு ஒன்றை இணையத்தில் கண்டது. பெண்கள் @ தலைமையானது அச் சமூகத்தின் முதியவர்கள் நாட்டின் தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் குற்றத் தவறொன்றைப் புரிந்துள்ளனர் எனத் தெரிவிக்கின்றது. இந்த வழக்கமானது பெண்களின் கௌரவத்திற்கான உரிமையுடன் முரண்படுவதுடன் மீறுகின்றது என அது மேலும் வாதிடுகின்றது.

ஆயினும், *ஷிலு* சமூகத்தின் தலைவர் இந்த வழக்கமானது மக்களின் மனதுகளிலும் கலாசாரத்திலும் நன்கு பதிந்துள்ள சமூகத்தின் நீண்ட காலமாக நிலைத்து நிற்கும்

பாரம்பரியம் ஒன்றாகும் எனத் தெரிவிக்கின்றார். அத் தலைவரும் சமூகத்தின் முதியவர்களும் அக் குற்றச்சாட்டை மறுப்பதுடன் பெண்ணொருவருடைய பாலியல் இச்சையைக் குறைக்கின்ற கிரியை ஒன்றை மாத்திரமே தாம் நிறைவேற்றியுள்ளதாக வாதிடுகின்றனர்.

பெண்கள் @ தலைமையானது இந்த வழக்காறின் வலிதுடைமை பற்றிய உமது ஆலோசனையைக் கோருகின்றது. பொருத்தமான வழக்குகளை ஆதாரங்காட்டி அதற்கு ஆலோசனை வழங்குக. சீலாந்தினுடைய பொருத்தமான சட்டங்கள் இலங்கையினதைப் போன்றதெனக் கருதுக.

6. நிலைபேண் சமாதானத்திற்கான நிலையம் என்பது அரசாங்க சார்பற்ற தாபனமொன்றாகும். மத்திய மாகாணத்திலுள்ள அரசாங்க சார்பற்ற தாபனங்களில் பணிபுரிகின்ற கனிஷ்ட வழக்கறிஞர்களுக்காக "நிலைபேண் சமாதானத்திற்காக மத்தியஸ்தம்" என்ற தொனிப்பொருளில் கருத்தரங்கொன்றை அது ஏற்பாடு செய்துள்ளது. "சமூகத்தில் நிலைபேண் சமதானத்தை முன்னேற்றுவதில் மத்தியஸ்த சபைகளின் வகிபங்கு" என்ற தலைப்பில் அக் கருத்தரங்கில் சமர்ப்பணமொன்றைச் செய்யுமாறு அந்த நிலையம் உம்மை வேண்டியுள்ளது. அந்த நிலையமானது, ஏனையவைகளுடன், மத்தியஸ்தம் பற்றிய சட்ட மற்றும் நடைமுறை விடயங்களை உமது சமர்ப்பணத்தில் உள்ளடக்குமாறு உம்மை வேண்டியுள்ளது.

உமது சமர்ப்பணத்தில் எதனை நீர் உள்ளடக்குவீரென விளக்குக.

7. (அ) சமூகத்தின் முன்னேற்றத்திற்காகப் பங்களிப்புச் செய்ய வழக்கறிஞர்கள் பலவழிகளில் தன்னார்வத்துடன் முன்வரலாம். சமூகத்தினை முன்னேற்றுவதற்கு வழக்கறிஞர்கள் வழங்கக்கூடிய **ஏதேனும் மூன்று** தன்னார்வ பங்களிப்புகளை அடையாளங் காண்க. அவ்வாறு சம்பந்தப்படுவது எவ்வாறு சமூகங்களை முன்னேற்றுமென காரணங்களைத் தந்து விளக்குக.

(ஆ) உமது கருத்தில், உயர்தொழில் மீது சமூகம் வைத்திருக்கும் நம்பிக்கையை மோசமாக மதிப்பிழக்கச் செய்வதான வழக்கறிஞர்களின் நடாத்தைக்கான உதாரணங்களைத் தருக. அத்தகைய நடாத்தையானது எவ்வாறு உயர்தொழிலை எதிரிடையாகப் பாதிக்குமென உதாரணங்களைத் தந்து விளக்குக.

*****